RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s209

OPEN ACCESS

# பழமொழி நானூற்றின் வழி மன்னன்-மக்கள் உறவு

அ. ஐவி [அ, *], ஜெ. சுஜாதா [அ]

[அ] தமிழ்த்துறை, இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்-629802, தமிழ்நாடு, இந்தியா.

# The King-People Relationship in the way of the Palamozhi Naanooru

A. Ivy [a, *], J. Sujatha [a]

[a] Department of Tamil, Lekshmipuram college of Arts and Science, Neyyoor-629802, Tamil Nadu, India

* Corresponding Author: ivysekar@gmail.com

Received: 20-06-2022
Revised: 02-10-2022
Accepted: 17-10-2022
Published: 05-11-2022

## ABSTRACT

The Palamozhi Naanooru, one of the Pathinenkilkanakku books, is a great ethic. The author of this book, Munruraiyarayanar, has expressed his experience in songs using proverbs. The source of love is the relationship. Politics, one of the virtues of life that is inherent in it, is the main reason for guiding the country. In such a way, for a country to be sovereign and sovereign, the relationship of its citizens with the king must be of good quality and dignity. The people prefer a king who respects the sentiments of the people of his country and follows the advice of the ministers. Along with that, the presence of officers who obey the king's orders will be a testimony to the excellent kingdom. Moreover, the country of a king who has a relationship who loves every living being as his own life will be a prosperous country. A country with good governance should prosper with neutrality without any moral breakdown. Thus, this article examines the relationship of the king who works with the needs of the people.

**Keywords:** Palamozhi Naanooru, King, People, Relationship, Pathinenkilkanakku

## முன்னுரை

நம் முன்னோர்களின் வாழ்வியல் அனுபவங்கள் வாயிலாக தோன்றி ஏட்டிலக்கியமாக வெளிவந்த சங்கம் மருவிய கால நூல்களில் பழமொழி நானூறு மிகச் சிறந்த இலக்கியமாகும். சொல்லக் கருதிய கருத்தை முதலிரண்டு அடிகளில் அமைத்து, அதற்கேற்ற பழமொழியை அடுத்த இரண்டடிகள் மூலம் வெளிப்படுத்தியுள்ள பாங்குச் சிறப்பிற்குரியதாகும். பழமொழிகள் மக்கள் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ளதை உணர்ந்து கொண்ட முன்றுறையரையனார் மனித சமூகத்தை நன்னெறிப்படுத்த இவ்வழியைச் செம்மையாகப் பயன்படுத்தி நானூறு செய்யுட்களை அமைத்துள்ளார். திருக்குறள் மற்றும் நாலடியாருக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படும் பழமொழி நானூறு சங்ககால பண்பாட்டை எடுத்துக் கூறும் கருத்துக் கருவூலமாகக் காணப்படுகிறது. மேலும், சமூகத்தை ஒருங்கிணைத்துச் செல்ல மூலக்காரணமாக அமையும் உறவுகள் குறித்தும், உறவுகளின் பரிணாம வளர்ச்சி குறித்தும் விளக்குகிறது. அவ்வகையில் ஒரு நாட்டின் உயர்வுக்கு உறுதுணையாக இருக்கும் மன்னன் மக்கள் உறவு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

## உறவுகள்

ஒன்றுடன் மற்றொன்று இணைவதை உறவு என்பர். மரபு வழியாக வருகின்ற உறவுகளை மனித உறவுகள் என்பர். சமுதாயத்தைக் கட்டமைக்க உறவு முக்கிய பங்கு வகிக்கிறது. "சமுதாய

அமைப்போடு தொடர்புடைய திருமணம், குடும்பம், மரபுமுறை, குடிவழி, உறவுக் குழுக்கள் போன்ற பல கூறுகளைப் புரிந்து கொள்வதில் உறவுமுறை ஆய்வுகளைப் போன்று வேறு எந்த ஆய்வுகளும் பயன்தருவதில்லை" என்று தனது நூலில் கூறுகிறார் (Bhakthavatsala Bharathi, 2015). அதைப் போன்று சமூகத்தை வழிப்படுத்த உருவாக்கப்பட்ட உறவுகளை அரசியல் உறவுகள் எனலாம். "உறவு என்பதற்கு நண்பு, சேர்க்கை" என்று பொருள் கூறுகிறது கௌரா தமிழ் அகராதி. நாம் வாழ்கின்ற நாட்டை தலைமையேற்று நடத்தும் அரசனைச் சார்ந்து வாழும் குடிமக்கள், அமைச்சர்கள், வரிவசூலிப்போர், படைவீரர்கள் என அரசனுக்கு உறுதுணை புரியும் அனைவரும் சமூகத்தின் உறவினர்களாவர்.

## அரசன்

சங்ககால முடியாட்சியின் தலைவன் அரசன் எனப்பட்டான். "அரசு என்பதற்கு அரசியல். அரசன், நாடு". அரசனின் இலக்கணம் குறித்து,

"தாய் ஒக்கும் அன்பில் தவம் ஒக்கும் நலம் பயப்பின்

சேய் ஒக்கும் முன் நின்று ஒரு செல் கதிஉய்க்கும் நீரால்

நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும் நுணங்கு கேள்வி

ஆயப் புகும்கால் அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னான்".

எனக் கம்பராமாயணம் குறிப்பிடுகிறது .பண்பாட்டு மானிடவியல் தலைமையுரிமை குறித்து, "தலைவனை நம்பியே மற்றவர்கள் வாழவேண்டுமென்ற அச்ச உணர்வே சமுதாய ஒழுங்கை நிலைப்படுத்துவதில் உதவுகிறது (Poovannan, 1984). தலைவன் உயர்குலத்தைச் சேர்ந்தவன் இயல்பிறந்த ஆற்றல்களைப் பெற்றவன் படைத்திறன் மிக்கவன் பொருளாதார நடவடிக்கைகளுக்கு விளைநிலத்தை ஒதுக்குவதிலும் விளைபொருள்களை மறுபங்கீடு செய்வதிலும் உரிமை பெற்றவன் எனப் பல நிலைகளில் அவன் தன்னை அதிகாரம் படைத்தவனாக வெளிப்படுத்திக் கொள்வதால் மக்கள் அனைவரையும் கட்டுக்குள் நிலைநிறுத்தி சமுதாய ஒழுங்கைக் காக்கிறான்" எனக் கூறுவதன் மூலம் அரசனின் பொறுப்புகளை அறியமுடிகிறது (Bhakthavatsala Bharathi, 2015). இவ்வாறு நாட்டை பல சூழல்களிலும் ஒருங்கிணைத்துச் செல்பவனே அரசனாகக் கருதப்படுவான்.

## அரசன் - மக்கள் உறவு

குடிமக்களை வருத்தாது அன்பு செலுத்தி ஆட்சி புரியக்கூடிய மன்னனையே மக்கள் விரும்புவர். அத்தகு சிறப்பு வாய்ந்த மன்னனைப் பெற்ற நாடு வளம் பெறும் என்பதனை,

"நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே

மன்னன் உயித்தே மலர்தலை உலகம்

அதனால், யான் உயிர் என்பது அறிகை

வேன்மிகு தானை வேந்தற்கு கடனே".

என்னும் புறநானூறு பாடல் உலக உயிர்களைக் காப்பது நெல்லும் நீரும் மட்டுமன்று. மன்னனின் முறையான காவல் சிறப்புமாகும். எனவே, அரசனே உலகுக்கு உயிர் என்கிறது (Puliyur kesigan, 2021).

ஒரு நாட்டின் தலைவனாக விளங்கக்கூடிய அரசனைப் பின்பற்றியே அந்நாட்டு மக்கள் விளங்குவர் என்பதை.

"இகழின் இகழ்ந்தாங்(கு) இறைமகன் ஒன்று

புகழினும் ஒக்கப் புகழ்ப இகல் மன்னன்

சீர்வழிப்பட்டதே மன்பதைமற் றென்செய்யும்

நீர்வழிப் பட்ட புணை"

என்கிறது நீதிநெறி விளக்கம் (Kavignar Padhmadhevan, 2019). ஆகவே, அரசன் தன் மக்களின் தகுதியறிந்து வரிவசூலித்தல் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு வரியைச் செலுத்தும் மக்கள் எவ்வித்ததிலும் வருத்தமடையாது இருந்தால் குடிமக்களோடு அரசனது உறவு மேம்படும். இக்கருத்தை,

"பொருத்தம் அழியாத பூந்தண்டார் மன்னர்

அருத்தம் அடிநிழ லாரை - வருத்தாது

கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றோ

வண்டுதா துண்டு விடல்"

என்னும் பாடல் விளக்குகிறது (Kavignar Padhmadhevan, 2019). அவ்வாறன்றி குடிமக்களை வருத்தி வாழும் கொடுங்கோல் அரசன் கூற்றுவனாகக் கருதப்படுவான் என்னும் கருத்தை,

"செய்வதென் வல்லை அரசாட் கொளின்".

என்னும் பழமொழி உணர்த்துகிறது (Kavignar Padhmadhevan, 2019). மக்களின் அன்பைப் பெற்ற அரசனைப் பகைவராலும் அழிக்க முடியாது. ஆயிரம் காக்கையை ஓட்ட ஒரு சிறுகல் போதுமானது போல மக்களின் நம்பிக்கைக்கு உரிய வேந்தன் ஒருவனால் பகைவரைத் தோற்று ஓடச் செய்ய முடியும் என்னும் கருத்தை,

"மறுமனத்தன் அல்லாத மாநலத்த வேந்தன்

உறுமனத்த னாக ஒழுகின் - செறுமனத்தார்

பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்ய

ஆயிரம் காக்கைக்கு ஓர் கல்"

என்ற பழமொழி நானூறு பாடல் விளக்குகிறது. இதன் மூலம் மக்களின் தேவையறிந்து சேவை செய்யும் அரசனைப் பின்பற்றி வாழும் மக்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வர் (Kavignar Padhmadhevan, 2019).

## அரசன் - அமைச்சர் உறவு

ஒரு நாடு செம்மையான பாதையை நோக்கிப் பயணிக்க அரசன் மட்டுமல்லாது அமைச்சருடைய பங்கும் இன்றியமையைததாகும். தகுந்த நேரத்தில் முறையாக ஆலோசனை கூறும் அளப்பரிய பணியை அமைச்சர்கள் மேற்கொண்டனர். தன்னுடைய கருத்திற்கு மட்டுமே முதன்மை கொடுத்து செயலாற்றக்கூடிய மன்னரது அரசாட்சி கெடும் என்பதனை,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்ன்ன்

கெடுப்பார் இலானும் கெடும்"

மன்னும் குறள் வழி அறிய முடிகிறது (Varatharasan, 2008). ஆகவே, நீதிநெறி வழுவாமல் அரசு புரிய அமைச்சரின் அறிவுரை முக்கியமான இடத்தை வகிக்கிறது. மேலும், சிறந்த அமைச்சரைப் பெற்றிராத அரசன் மேற்கொள்ளும் எச்செயலும் தீமையாகவே முடியும். மேலும், நாட்டின் வளமும் அருகும் என்பது கண்கூடு. இதனை,

"கற்றார் பலரைத்தன் கண்ணாக இல்லாதான்

உற்றிடர்ப் பட்ட பொழுதின்கண் தேற்றம்

மரையா துணைபயிரும் மாமலை நாட

சுரையாழ் நரம்பறுத் தற்று"

என்னும் பாடல் வழி அறியலாகிறது (Kavignar Padhmadhevan, 2019).

## புலவர் - புரவலர் உறவு

இல்லையென்று வருவோர்க்கு இல்லையென்று சொல்லாது அள்ளி கொடுக்கக்கூடிய வள்ளல் தன்மையோடு சங்ககால மன்னர்கள் விளங்கினர். தன்னை நாடி வரும் புலவர்களை இன்முகத்தோடு வரவேற்று, விருந்தளித்து வேண்டிய யாவற்றையும் கொடுத்து வழியனுப்பும் மகத்தான குணத்தை அரசர்கள் கைக்கொண்டிருந்தனர். அம்மன்னர்கள் வழித்தோன்றல்களும் முன்னோர் வழியைப் பின்பற்றி வறியோருடன் நட்பு பாராட்டினர் என்னும் செய்திக்கு இலக்கணமாக, ஒரு காலத்தில் பறம்பு நாடு மழை வளங்குன்றி வறட்சி நிலவியபோது, கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரி மகளிர் தாம் சமைப்பதற்குப் பயன்படுத்தும் கலம் நிறைய பொன் கொடுத்து அவர்தம் வறுமைத்துயர் நீங்க உதவினர் என்பதனை,

"மாரியோன் றின்றி வறந்திருந்த காலத்தும்

பாரி மடமகள் பாண்மகற்கு - நீருலையுள்

பொன்திறந்து கொன்டு புகாவாக நல்கினள்

ஒன்றுரு முன்றிலோ இல்".

என்னும் பாடல் வலியுறுத்துகிறது (Kavignar Padhmadhevan, 2019). இதன் மூலம், இரப்போர்க்கு ஈதல் மட்டுமல்லாது, தன் நாட்டைச் சார்ந்தோர் எவ்வித துயரமும் இன்றி வாழ வேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களாக அரசர்கள் வறியோருடன் உறவு கொண்டிருந்தனர்.

## அரசன் - ஏவலாள் உறவு

பண்டைத் தமிழகத்தில் நாட்டை ஆளும் மன்னனைத் தெய்வமாக வணங்கும் மரபு காணப்பட்டது. மன்னன் இடும் கட்டளையை நிறைவேற்றும் செயலைச் செய்யக்கூடிய ஏவலர்கள் இருந்தனர். இத்தகைய பண்பும் பணிவும் கொண்ட ஏவலர்களை மன்னன் தன்னுடன் வைத்துக் கொண்டான். அத்துடன் மன்னன் ஏவும் செயலை எவ்விதக் குறைபாடும் இல்லாமல் செய்து முடிப்பதே ஏவலாளின் கடமையாகக் கருதப்பட்டது. இக்கருத்தை,

"வெற்றிவேல் வேந்தன் வியங்கொண்டால் யாமொன்றும்

பெற்றிலே மென்பது பேதமையே - மற்றதனை

எவ்வ மிலராகிச் செய்க அதுவன்றோ

செய்கென்றான் உண்கென்னு மாறு"

என்னும் பாடல் விளக்குகிறது (Kavignar Padhmadhevan, 2019). அரசன் கட்டளையை நிறைவேற்றும் நிலையில் மன்னருடன் அதிகம் நெருக்கம் காட்டாமலும்,பயந்து ஒதுங்கி வாழாமலும், மன்னரது வெறுப்புக்கு ஆளாகாமலும் செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை,

"விடலமை செய்து வெருண்டகன்று நில்லாது

உடலகு மன்னர் உவப்ப வொழுகின்"

என்னும் பாடல் உரைக்கிறது (Kavignar Padhmadhevan, 2019). இக்கருத்தை,

"அகலாது அணுகாது தீக்காய்வார் போலக்

இகல்வேந்தர் சேர்ந்தொழுகு வார்".

என்னும் திருக்குறளும் வலியுறுத்துகிறது (Varatharasan, 2008).

## நீதி முன் அனைவரும் சமம்

நாட்டு மக்களின் நிலையறிந்து நன்முறையில் நீதிநெறியோடு ஆட்சிபுரிபவனே சிறந்த அரசனாக மதிக்கப்படுகிறான். அவ்வகையில் பொற்கை பாண்டியனது ஆட்சி காலத்தில் கீரந்தை என்னும் வேதியன் தன் மனைவியை மனையிலிருத்தி விட்டு மன்னனது செங்கோல் உன்னைக் காப்பாற்றும் என்று நம்பிக்கையூட்டி வெளியூர் செல்கிறான். இதனை நகர்வலம் வந்த பாண்டியன் கேட்கிறான். அதன் காரணமாக அக்கிராமத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை தானே ஏற்றுக் கொள்கிறான். சில நாட்களுக்குப் பின் கீரந்தை என்னும் வேதியன் வீட்டில் ஆள்அரவம் கேட்கிறது. உள்ளே இருப்பது யார் என்பதை அறியாமல் கதவை தட்டுகிறான். இதன் காரணமாக வேதியன் தன் மனைவி மீது சந்தேகம் கொள்கிறான். அதனைக் கேள்வியுற்ற பாண்டியன் தன் செயலுக்கு வருந்துகிறான். தான் செய்த தவறுக்குரிய தண்டனை குறித்து மக்கள் முன் நீதி கேட்கிறான். மக்களின் தீர்ப்பிற்கேற்ப கதவை தட்டிய தன் கையை வாளால் வெட்டி வீழ்த்துகிறான். இதனை,

"எனக்குத் தகவென்றால் என்பதே நோக்கித்

தனக்குக் கரியாவான் தானாய்த் தவற்றை

நினைத்துத் தன் கைக்குறைத்தான் தென்னவனும் காணார்

எனச் செய்யார் மாணா வினை."

என்னும் பாடல் விவரிக்கிறது (Kavignar Padhmadhevan, 2019).

இதன் வாயிலாக, குடிமக்களின் மனம் அறிந்து அரசன் நீதி செலுத்தியது மட்டுமல்லாமல், குடிமக்களை வருந்தாமல் காப்பதே சிறந்த மன்னனுக்கு அழகு என்பது புலனாகின்றது. இதனை,

"கோல்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்

கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்

மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை

மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்

தன்னுயி ரென்னும் தகுதியின் றாகும்"

என்னும் மணிமேகலை வரிகள் உணர்த்துகின்றன (Puliyur kesigan, 2007).

## உயிர்களோடு கொண்ட உறவு

சங்ககால மன்னர்கள் எவ்வுயிரையும் தன்னுயிர் போல் மதிக்கும் உயரிய குணம் கொண்டவர்கள். சிலர் சமூகத்தோடு கூடிய உறவை மேம்படத்துவதையே முதற்கடமையாகக் கொண்டிருந்தனர். அவர்களுள் மனுநீதிச் சோழனும் ஒருவர். சான்றாக வீதியுலா வந்த தனது மகனின் தேர்ச்சக்கரத்தில் விழுந்து மடிந்த கன்றுக்குட்டிக்கு நீதி வழங்கும் பொருட்டுத் தன் ஒரே மகன் என்றும் பாராமல் தேரைச் செலுத்திப் பசுவுற்ற துயரைத் தானும் அனுபவித்து நீதியை நிலைநாட்டினான். இந்நிகழ்வை,

"சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்

காலை கழிந்ததன் பின்றையும் - மேலைக்

கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்

முறைமைக்கு மூப்பிளமை இல்"

என்னும் பாடல் மூலம் சுட்டிக் காட்டுகிறார் (Kavignar Padhmadhevan, 2019). உயிரினங்களுக்குள் வேற்றுமை பாராட்டாது, நீதி வழங்கிய உயர்ந்த உறவு மன்னர்களிடம் இருந்ததை அறியமுடிகிறது.

அதோடு மட்டுமல்லாமல் உயிரினங்களுள் உயர்வு தாழ்வு கருதாது ஒரே நிலையில் கருதும் பண்பு மன்னர்களிடம் காணப்பட்டது என்பதை

“காக்கை குருவி யெங்கள் ஜாதி - நீள்

கடலும் மலையுமெங்கள் கூட்டம்” (Virugai Pichumani, 2010)

என்னும் பாரதியின் கவிதை வரிகள் நினைவு கூர்கின்றன. மேலும்,

“மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கு எல்லாம்

கண்ணும் ஆவியும் ஆம் பெருங்காவலன்”

என்னும் பெரியபுராணப் பாடல் வரிகள் நாட்டில் வாழ்கின்ற உயிர்களுக்கெல்லாம் உயிராகத் திகழ்பவன் அரசன் எனக் கூறுவதன் மூலம் மனுநீதிச்சோழன் நாட்டு மக்கள் மீது கொண்ட பற்றுதல் போன்று உயிரினங்கள் மீதும் பற்றுக் கொண்டிருந்தான் என்னும் கருத்துப் புலனாகிறது (Manickanar, 1990).

## முடிவுரை

நீதி இலக்கியங்களில் ஒன்றான பழமொழி நானூறு வாழ்வியல் கருத்துகளோடு நட்புறவுகளை முன்னிறுத்தி உள்ளது சிறப்பான ஒன்றாகும். ஓர் உறவு என்பது அன்பை அடிப்படையாகக் கொண்டது. நாட்டை ஆளும் அரசன் குடிமக்களோடு அன்பு கொண்டவனாகவும், சிறந்த அமைச்சரைத் தன்னோடு வைத்திருப்பவனாகவும் இருக்க வேண்டும். அதோடு, புலவர்களை மதிப்பவனாகவும், தனக்காக பணிபுரியும் ஏவலாட்களுடன் பண்புடன் நடப்பவனாகவும் இருக்க வேண்டும். அதுமட்டுன்றி, நீதி எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானதாக இருந்தது. இதன் மூலம், சங்ககால அரசர் காலம் ஒரு பொற்காலமாக இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. ஆனால், முடியாட்சி மறைந்து குடியாட்சி பெற்ற நாட்டில் சுதந்திரம் இல்லாத நிலை காணப்படுகிறது. நீதி ஒரு சாரார்க்கு உரியதாக மாறிக் கொண்டிருக்கிறது. எல்லாமும் எல்லாருக்கும் கிடைக்கும் வகையில் அரசாட்சி அமைய அனைத்து உயிரினங்களிடம் அன்பு காட்டினால் மட்டுமே இது சாத்தியப்படும். எனவே, உறவுகளை நேசிப்போம் என்பன போன்ற உயரிய கருத்துகளை இக்கட்டுரை விளக்குகிறது.

## References

Bhakthavatsala Bharathi, (2015) Panpattu uraiyadal, Adaiyalam veeliyedu, Tirchy, India.

Kavignar Padhmadhevan, (2019) Neethi Nool Kalanjiyam, Kottravai Veeliyeedu, Chennai, India.

Manickanar, A. (1990) Periyapuranam, Varthamanan Pathippagam, Chennai, India.

Poovannan, (1984) Kambaramayanam Moolamum Thelivuraivum, Varthamanan Pathippagam, Chennai, India.

Puliyur kesigan, (2007) Manimegalai mollamum uraiyum, Paari niliyam, Chennai, India.

Puliyur kesigan, (2021) Purananuru, Paari niliyam, Chennai, India.

Varatharasan, M. (2008) Thirukkural Thalivurai, The south India Saiva Siddhanda Works Publishing Society, Chennai, India.

Virugai Pichumani, (2010) Bharathiar Kavithaikal, Sudharsan Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License